புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# நற்றிணையில் குறுநில மன்னர்கள்

மு.சதீஸ்குமார்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அரசு கலைக் கல்லூரி,
உடுமலைப்பேட்டை – 642126.

## ஆய்வுச்சுருக்கம்

நற்றிணையில் நன்னன், பழையன், விரான், மிஞிலி ஆகிய குறுநில மன்னர்களின் போர் மற்றும் வரலாறு குறித்து செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறுநில மன்னர்கள் மூவேந்தர் ஆட்சியில் அவர்களின் படைத்தலைவர்களாகவும் இருந்து, பிற நாட்டு மன்னர்களுடன் போரில் தன்னுடைய வீரச்சிறப்பையும் வெளிப்படுத்தியுள்ளனர். நன்னன் ஆட்சி செய்த மலைப்பகுதியானது செல்வச்செழிப்பு மிகுந்ததாகவும் வாணிபத்திற்கு ஏற்றாற்போல் பல்வேறு பொருள் விளைகின்ற இடமாகவும் விளங்கியது. போரில் வெற்றி பெற்ற மன்னர் தோற்ற நாட்டு மன்னர் மற்றும் மக்களின் மீது பெரும் கொடுஞ்செயல்கள் நிகழ்த்தியுள்ளனர். மன்னர்களின் குலக்குறி அடையாளங்கள் போரின் போது அழிக்கப்பட்டிருக்கின்றன. குறுநில மன்னர்கள் கொடைப் பண்புகளில் மிகச்சிறந்து விளங்கியதால் வள்ளல்களாக சிறப்பிக்கப்பட்டனர். அவர்களின் ஆட்சிக்கு உட்பட்ட பழமையான ஊர்களிலுள்ள மக்கள் முன்னோர்களுக்கு படையலிட்டு வழிபட்டனர். குறுநில மன்னர்களின் போர், வாணிபம், கொடை, வழிபாடு ஆகிய செய்திகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

## முன்னுரை

பழந்தமிழரின் வாழ்வியலை கண்முன்னே கொண்டு வருவனவாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. சங்கத் தொகை நூல்களை அறிய உதவும் பழம் பாடலில் முதலாவதாக வைத்து சிறப்பிக்கப்படும் நூல் நற்றிணை. இந்நூலின் வாயிலாக வேந்தர்களுக்கு அடுத்த படிநிலையில் புலவர்களால் அதிகம் பாடப்பட்ட குறுநில மன்னர்களின் வரலாற்று நிகழ்வுகளையும் போரின் பின்புலத் தன்மையையும் பண்பாட்டுக் கூறுகளையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

## குறுநில மன்னர்கள்

சங்க காலத்தில் தமிழகத்தின் பெரும்பகுதியை மூவேந்தர்கள் ஆட்சி செய்து வந்தனர். அவர்களுக்கு அடுத்த நிலையில் குறுநில மன்னர்கள் சிறு நிலப்பகுதியை ஆட்சி செய்து வந்தனர். ''சீறூர்கள் பலவற்றை உள்ளடக்கிய குறுநிலப் பகுதிக்குத் தலைவர்களாக விளங்கியமையால் குறுநில மன்னர்கள் எனப்பட்டனர்''.[1] இவர்கள் போர்க் காலங்களில் வேந்தர்களுக்குப் படைத்தலைவர்களாகவும் இருந்தனர். குறுநில மன்னர்கள் கொடை வள்ளல்கள் என புலவர்களால் சிறப்பிக்கப்படுகின்றனர்.

## வரலாற்றுச் செய்திகள்

வரலாறு என்பது குறிப்பிட்ட இனத்தாரின் மொழி, பண்பாடு ஆகியவற்றின் முகம் பார்க்கும் கண்ணாடி என்பர். வரலாற்றின் மூலமாக அக்கால கட்டத்தின் சமூக, பொருளாதார நிலைகள் மற்றும் வாணிபச் செய்திகளையும் அறிய முடிகின்றது. அதோடு வாழ்வியல் சார்ந்த நிகழ்வுகளையும் அறிந்து கொள்ள முடிகிறது.

*கொண்கானங்கிழான் நன்னன்*

*குறுநில மன்னர்கள் ஆட்சி செய்கின்ற நிலம் நால்வகை நில அமைப்பிற்கு ஏற்றாற் போல் வளங்களைப் பெற்றிருந்தது, நன்னனின் கொண்கானம் மலையில் அகில், தேக்கு, மிளகு, பொன், யானைத் தந்தங்கள் போன்ற மதிப்புக்கூட்டுப் பொருள்கள் கிடைக்கப் பெற்றன. பெரும் வருவாய்களை பெற்றிருந்த தன்மையை,*

*"பொன்படு கொண்கான நன்னன் நல்நாட்டு*
*ஏழிற் குன்றம்... ...."*[2]

*என்னும் வரிகள் புலப்படுத்துகிறது. கொண்கானத்தின் வளங்கள் மூலமாக நன்னன் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கி வணிகத்தில் சிறந்து விளங்கினான்.*

*"பொன்னையும் மணிக்கற்களையும் வாணிகப் பண்டமாக்கி வளம் பெற்றிருக்கும் வாய்ப்பினைப் பெற்றான் நன்னன். அதனால் செல்வத்தில் திளைத்தான். அவன் செல்வத்தினை பாழி நகரத்தில் உள்ள குளத்தில் மறைத்து வைத்தான் அந்தச் செல்வம் உரோமானியக் காசுகளாகவும் இருக்கலாம். அவன் நகரங்கள் செல்வம் மிக்க நகரங்களாக இருந்தமையால் சேரன் அவன் மீது படையெடுத்தான்"*[3] *மூவேந்தர்கள் படையெடுத்துச் செல்கின்ற அளவிற்கு நன்னன் செல்வ வளமுடையவனாக திகழ்ந்தான். அவ்வளத்தை தன்னகப்படுத்திக் கொண்டு தன் ஆட்சிப்பரப்பின் வள ஆதாரங்களை மேம்படுத்த எண்ணி குறுநில மன்னர்கள் மீது படையெடுத்திருக்கின்றனர் என அறிய முடிகிறது.*

*படைத்தலைவனாக பழையன்*

*குறுநில மன்னனான பழையன் பேளர் என்னும் ஊரினை ஆட்சி செய்து வந்தான். கொங்கர் சோழர்களை எதிர்த்து போரிட்ட போது சோழர்கள் கொங்கரை வெற்றி கொள்ள முடியாமல் பழையனின் உதவியை நாடினர். போரில் யானைப்படைகளைக் கொண்டுள்ள மன்னன் வெற்றியைத் தன்னிடத்தே கொண்டவன் ஆவான். யானைகளை போரில் முதற்படையாக நிறுத்துவதன் மூலம் பெரும் சேதங்களை ஏற்படுத்தி படைகளைச் சிதறி ஓடச் செய்யும்.*

*"பேருருவம் கொண்டதும் பெருந்தீனி தின்பதுமாகிய யானை செழித்ததற்கு முடியாட்சியும் போர்த் தொழில்நுட்பத்தில் அது ஈடுபடுத்தப்பட்டதுமே முதன்மைக் காரணிகள்"*[4] *இத்தகைய சிறப்புடைய யானைக் கூட்டங்களை கொண்டு பழையன் கொங்கரை அடக்கி வெற்றி கண்டான் என்பதை,*

*"கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்*
*வெண்கோட்டு யானைப்பேளர் கிழவோன்*
*பழையன் வேல்வாய்த் தன்ன... "*[5]

*என்னும் வரிகளால் அறியலாம். இதனை நோக்கும் போது குறுநில மன்னர்களின் உதவி பெரு வேந்தர்களுக்கு போர்க் காலங்களில் மிக முக்கியத் தேவையாக இருந்துள்ளது.*

*அழிசி*

*சோழ நாட்டின் காவிரிக்கரையில் உள்ள ஆர்க்காட்டை ஆட்சி செய்கின்ற அரசன். மன்னர்களின் அரண்களானது பகைவராலே கைப்பற்றுவதற்கு அரியதாயும் போர்நிலைகளுக்கு கடியதாகவும் அமைந்திருக்கின்ற மாற்றாரின் அரண்களை அழித்து வெற்றி கண்டவன். பின்னாளில் சோழர்களின் ஆட்சியின் கீழ் உள்ள உறையூரில் ஆட்சி புரிந்தான். அவர்களின் ஆட்சிப் பகுதியில் மன்னனாக இருந்த காரணத்தால் சோழர் குடியில் பிறந்தவன் என்ற வரலாற்றுக் குறிப்பினை,*

*"வெல்போர்ச் சோழர் அழிசியம் பெருங்காட்டு... "*[6]

*எனும் நற்றிணைப் பாடல் வரி தெரிவிக்கின்றது. உறையூரானது சோழர்களின் தலைநகராக விளங்கியது. சோழர் மரபு வழித் தோன்றலாக இருந்த காரணத்தினாலே ஆட்சி புரிய முடிந்ததை உணர முடிகின்றது.*

*போர்ச் செய்திகள்*

*சங்க கால இனக்குழு சமூகம் தனியுடைமைச் சமூகமாக மாற்றமடைந்த பொழுது போர்கள் இன்றியமையாத ஒன்றாக இருந்துள்ளது. வேந்தர்கள் குறுநில மன்னர்களை*

தனக்குக்கீழ் கொண்டு வரவும் பல போர்கள் நடைபெற்றன. ''மண்ணாசை காரணமாக ஒரு மன்னன் மற்றொருமன்னன் மேல் படையெடுத்துச் சென்றான்'' (தொல்.) நால் வகை நில அமைப்புகளையும் தன் ஒற்றைக்குடையின் கீழ் கொண்டு வர முற்படும் பொழுது போரும் பூசல்களும் ஏற்பட்டிருக்கின்றன.

போரும் போரில் வென்றவர் செயல்களும்

போரில் வெற்றி பெற்ற மன்னன் பகைவரின் நாட்டைத் தீயிட்டு அழித்து செல்வங்களை கொள்ளையிட்டான். அத்துடன் நாட்டு நீர் நிலைகளை யானைகள் விட்டு அழிக்கப்பட்டு விளை நிலங்களில் கழுதை பூட்டி கவடி விதைத்தும் சேதப்படுத்தினான். பகைவரின் உறுப்புகளைச் சிதைப்பதும் பெருமை என கருதினான்.

சேரன் கணைக்காலிரும் பொறை மூவன் என்ற குறுநில மன்னனை தோற்கடித்தான். அவனுடைய பற்களைப் பிடுங்கி தன்னுடைய அரண்மனையின் கதவில் வைத்து இழைத்தான்.

''… … … … … … … … … .. மூவன்
முழுவலி முள்ளெயி றழுத்திய கதவிற்
கானலந் தொண்டிப் பொருநன் வென்வேல்
தெறலருத் தானைப் பொறையன் பாசறை''[7]

என்னும் பாடல் வரிகள், பகைவரின் பல்லை தன் அரண்மனைக் கதவில் பொறிப்பது போரின் வெற்றிச் சிறப்பை பறைசாற்றும் அடையாளமாக இருந்துள்ளது. இச்செயல் பண்டைய கால போர் மரபாக இருந்துள்ளதை அறிய முடிகின்றது.

நன்னன் பிண்டனைப் போரில் வென்றான். அத்தோடு நில்லாமல் அந்நாட்டுப் பெண்கள் சிறைபிடிக்கப்பட்டனர். அவர்களின் கூந்தலைக் கொய்து கயிறாகத் திரித்தான் எனும் செய்தியை,

''விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்தர் ஓட்டிய ஏந்துவேல் நன்னன்
கூந்தல் முரற்சியின் கொடிதே…..''[8]

என்று பரணரின் பாடல் தெரிவிக்கிறது. கூந்தல் கயிற்றின் மூலமாக தான் வென்ற நாட்டு யானைகளைக் கட்டி இழுத்து வந்தான். இச்செயல் நாட்டினை இழிவுபடுத்தும் செயலாகவும் வென்றவரின் ஆதிக்கச் செயலாகவும் இருப்பதனைக் காணமுடிகிறது.

காவல் மரம்

''கடிமரம்'' அல்லது ''காவல்மரம்'' அரசுச் சின்னங்களுள் முக்கியமான ஒன்றாகும். அதனைப் பாதுகாப்பது அரசர், மக்களின் கடமையாக இருந்தது. வீரர்கள் இரவு பகலாக அம்மரத்தினைக் காத்து நிற்பர். ''காவல் மரம் மூவேந்தர்களுக்கு மட்டுமே உரிய சிறப்பு அடையாளமாக அமையாமல் ஆட்சி செய்த அனைவருக்கும் உரிய ஒரு சின்னமாக அமைந்திருந்தது''[9] இதனை மன்னர்களின் குலக்குறி அடையாளங்களாகப் பார்க்கப்பட்டதைக் காண முடிகிறது.

ஒவ்வொரு அரசர்களும் புன்னை, வேம்பு, வேங்கை, பனை, மாமரம் போன்றவற்றை குலக்குறி அடையாளமாக பாதுகாத்தனர். மரத்தை வெட்டுவது போரில் வென்றதற்கு ஈடானதாக கருதப்ட்டுள்ளது என்பதை,

''அன்னியும் பெரியன் அவனும் விழுமிய
இருபெரு வேந்தர் பொருகளத் தொழித்த
புன்னை விழுமம் போல
என்னொடு கழியுமிவ் விருவரது இகலே''[10]

என்னும் வரிகள் தெரிவிக்கின்றது. பெரியனின் காவல் மரமான புன்னையை அன்னி வெட்டி வீழ்த்தியதால் போர் முடிவுற்று இருவரது பகையும் முடிவுற்றது. காவல் மரத்தினை வெட்டிவீழ்த்துதல் போர் மரபாக இருந்துள்ளது.

பண்பாட்டுச் செய்திகள்

பண்பாடு என்பது பண்படுதலைக் குறிப்பதாகும். சங்ககாலச் சான்றோர் பண்பட்ட வாழ்வியலை மேற்கொண்டு வாழ்ந்தனர். ''பண்பாடு ஒரு சமூகத்தினுடைய வெளிப்பாடு ஒரு மக்கள் திரள் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிற முறையாகும்''[11] சங்க இலக்கியம் தமிழர்களின்

பண்பாட்டை வெளிப்படுத்தும் கருவூலமாகத் திகழ்கிறது. கொடை, விருந்தோம்பல், வழிபாடு போன்ற பண்பாட்டில் சிறந்தோங்கி இருந்துள்ளனர்.

கொடை

மன்னர்கள் அறவாழ்வையும் கொடையையும் முக்கியமாகக் கருதினர். தன்னை நாடி வரும் இரவலர்க்கு இல்லையென்பது நாட்டை இழத்தலினும் அவமானதாகக் கருதினர். கொடை கொடுப்பதில் பலவகைகள் உண்டு. அவற்றினை, "உண்டிக்கொடை, பொற்கொடை, ஊர்திக் கொடை, விலங்குக்கொடை, சின்னக்கொடை, பெயர்க்கொடை, நிலக்கொடை, ஆட்சிக்கொடை"[12] என ஒன்பது வகையாகப் பிரித்துள்ளனர்.

மன்னர்கள் புலவர், பாணர், விறலி, மக்கள் போன்றோருக்கு வேண்டும் பொருட்களைக் கொடுத்து சிறப்புப் பெற்றனர். இருப்பையூரினை ஆட்சி செய்கின்ற விரான் இரவலர்க்கு ஊர்திக்கொடை கொடுத்த நிகழ்வினை,

"வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப்
பழனப் பல்புள் இரியக் கழனி
வாங்குசினை மருதத் தூங்குதுணர் உதிருந்
தேர்வண் விராஅன் இருப்பை அன்ன.…"[13]

பரணரின் பாடல் வரிகள் தெரிவிக்கின்றது. மருத மரமானது உழவர்களின் தண்ணுமைக்குப் பயந்து தன்னை நாடி வரும் பறவைகளுக்கு மருதப்பூக்களை உதிர்ப்பதனைப் போன்று இரவலர்க்கு தேர்களைக் கொடையாகக் கொடுத்தான் விரான் என்பது இப்பாடல் வழி எடுத்துரைக்கப்படுவதை அறியலாம்.

வழிபாடு

வழிபாடு என்பது தம் முன்னோர் வழிப்படுதலே ஆகும். தமிழர்களிடம் நம்பிக்கை சார்ந்த வழிபாட்டு முறைகள் வாழ்வோடு இரண்டறக் கலந்துள்ளது. அதில் இறந்தோருக்கு படையலிட்டு வழிபடுவதும் ஒன்றாகும். "அமாவாசை போன்ற முன்னோர் நினைவு நாட்களில் காக்கைக்கு உணவைப்படைத்து அவை அவ்உணவைத் தின்ற பிறகே உண்ணும் வழக்கம் இன்று இருப்பது போன்றே பழங்காலத்திலும் இருந்தது. காக்கைகளின் வடிவில் முன்னோர்கள் உணவை ஏற்பதாக மக்களிடம் நம்பிக்கை இருந்தது. எனவே காக்கைக்கு இடப்பட்ட உணவு "பலி" எனப்பட்டது"14 தம் முன்னோர்க்கு வழிபாடு செய்யக்கூடிய மனைகளும் விருந்தோம்பும் உயர்குடிச் சிறப்பும் கொண்டது ஆதி அருமனின் ஊராகும் என்பதனை,

"கருங்கண் கருனைச் செந்நெல் வெண்சோறு
சூருடைப் பலியொடு கவரிய குறுங்கால்
கூழுடை நல்மனைக் குழுவின இருக்கும்
மூதில் அருமன் பேர்இசைச் சிறுகுடி"[15]

என்னும் பாடல் விளங்குகிறது. தம் முன்னோர்க்கு கருனைக்கிழங்கு பொரியலுடன் செந்நெல் மூலமாக சமைக்கப்பட்ட வெண்மையான சோற்றுப்பலியை காக்கைக்கு படையலிட்டு வணங்கினர். காக்கைக்குப் பலியிடுவதால் தம் முன்னோர்களுக்குச் செய்யும் வழிபாடு என்பதோடு, நாம் செய்கின்ற கர்ம வினைகளான நன்மை, தீமை என்பவற்றால் எவ்வித இடர்பாடும், துன்பமும் நம்மை அணுகாது என்னும் வாழ்வியல் நம்பிக்கை சார்ந்தும் மேற்கொள்ளப்படுகின்ற ஒன்றாகவும் கருதப்படுகிறது. இவ்வழிபாடு காலங்காலமாகப் போற்றுப்படுவது என்பதும், தமிழர்கள் அனைவரின் வாழ்விலும் இத்தகைய வழிபாடு சிறந்து காணப்படுகிறது என்பதையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

முடிவுரை

நற்றிணையில் குறுநில மன்னர்கள் பற்றிய பல்வேறு செய்திகள் தொகுத்து ஆராயப்பட்டது. குறுநில மன்னர்களில் சிலர் மூவேந்தர்களின் படைத்தலைவர்களகாவும் இருந்துள்ளனர்.

குறுநில மன்னர்கள் ஆட்சி புரிகின்ற மலைப்பகுதி வளமும் அதற்கேற்ப வாணிபமும் சிறந்து விளங்கியுள்ளது. இதனால் வேந்தர்களுடன் போரும் பூசலும் நடைபெற்றது.

போரில் குலக்குறி அடையாளமான காவல் மரங்களை வெட்டுதல், மகளிரின் கூந்தலை கயிறாகத் திரித்தல், மன்னரின் உறுப்புகளைச் சிதைத்தல் போன்ற கொடுஞ்செயல்கள் மேற்கொண்டிருந்ததை அறிய முடிகின்றது.

குறுநில மன்னர்கள் கொடை மற்றும் வழிபாடு சார்ந்த பண்பாட்டில் சிறந்து விளங்கி இருந்திருக்கின்றனர் என்பதை இக்கட்டுரை வழி அறிய முடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. வே.பெருமாள்சாமி, தமிழகத்தில் அரசுகளின் தோற்றம், ப.76.
2. அ.நாராயணசாமி ஐயர் (உ.ஆ), நற்றிணை மூலமும் உரையும், பா.391.
3. ர.பூங்குன்றன், வேளிர் வரலாறு, ப.78.
4. தாமஸ் ஆர்.டிரவுட்மன், யானைகளும் அரசர்களும், ப.ஜெகநாதன், சு.தியடோர் பாஸ்கரன்,(மொ. பெ ).14.
5. அ.நாராயணசாமி ஐயர் (உ.ஆ),நற்றிணை மூலமும் உரையும்., பா.10.
6. மேலது, பா.87.
7. மேலது, பா.18.
8. மேலது, பா.270.
9. அ.பாண்டுரங்கன், சங்க இலக்கியம் (சமயம், வழிபாடு, அரசு, சமூகம்), ப.114.
10. அ.நாராயணசாமி ஐயர் (உ.ஆ), மு.கு.நூ., பா.180.
11. அ.மோகனா, இந்திய இலக்கியச் சிற்பிகள் தொ.பரமசிவன்,ப.11.
12. ஞ.தேவநேயப்பாவாணர், பழந்தமிழாட்சி, ப.104.
13. அ.நாராயணசாமி ஐயர் (உ.ஆ), மு.கு.நூ., பா.350.
14. அ.பாண்டுரங்கன், மு.கு.நூ., ப.192.
15. அ.நாராயணசாமி ஐயர் (உ.ஆ), மு.கு.நூ., பா.367.

துணைநூற்பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. தேவநேயப் பாவாணர்.ஞா., | ... | பழந்தமிழாட்சி,<br>பூம்புகார் பதிப்பகம், சென்னை,<br>இரண்டாம் பதிப்பு, 2022. |
| 2. நாராயணசாமி ஐயர், அ., | ... | உரையாசிரியர், நற்றிணை,<br>சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,<br>திருநெல்வேலி, நான்காம் பதிப்பு, 1967. |
| 3. பாண்டுரங்கன், அ., | ... | சங்க இலக்கியம் (சமயம், வழிபாடு,<br>அரசு, சமூகம்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,<br>சென்னை, முதற்பதிப்பு, 2018. |
| 4. பூங்குன்ரன், ரா., | ... | வேளிர் வரலாறு,<br>தடாகம் வெளியீடு, சென்னை,<br>முதற்பதிப்பு, 2021. |
| 5. பெருமாள்சாமி, வெ., | ... | தமிழகத்தில் அரசுகளின் தோற்றம்,<br>பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை,<br>முதற்பதிப்பு, 2014. |
| 6. மோகனா, அ., | ... | இந்திய இலக்கியச் சிற்பிகள்<br>தொ.பரமசிவன், சாகித்ய அகாடமி,<br>நியூ டெல்லி, முதற்பதிப்பு, 2023. |
| 7. தாமஸ்.ஆர்.டிரவுட்மன், | ... | யானைகளும் அரசர்களும்,<br>ஜெகநாதன்.ப, தியேடோர் பாஸ்கரன்.சு,<br>மொழிபெயர்ப்பு, காலச்சுவடு பதிப்பகம்,<br>நாகர்கோவில், மூன்றாம் பதிப்பு, 2023. |

******** ******** ********* ******** ******** ********* ********* *********